# நாட்பட்ட வலிநோயாளிகளின் வலியேற்பு நிலையும் அதனுடன் இணைந்த காரணிகளும்

**கோவர்த்தனி, ச.. மேனகா, சி.**
மெய்யியல்துறை (உளவியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
kovarthanishanthirasekaram@gmail.com

*"நாட்பட்ட வலி நோயாளிகளின் வலியேற்பு நிலையும் அதனுடன் இணைந்த காரணிகளும்" என்ற தலைப்பில் இவ்வாய்வானது யாழ்ப்பாண பொது வைத்தியசாலையில் நாட்பட்ட வலிக்கான சிகிச்சைகளினை பெற்றுக் கொள்ளும் நான்கு சிகிச்சை பிரிவுகளி லிருந்து ஆய்வொழுக்க மட்டுப்பாடுகள் காரணமாக 25 மாதிரிகள் வீதம் 100 மாதிரிகள் நோக்க மாதிரியெடுப்பு முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு குறுக்குவெட்டு ஆய்வு வடிவமைப்பினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது இவ் ஆய்வின் நோக்கம் நாட்பட்ட வலி நோயாளிகளின் வலியேற்பு நிலையினை அளவிடுவதுடன் அவ் வலியேற்பு நிலையுடன் தொடர்புடைய காரணிகளை ஆராய்வதுமாகும். ஆய்வு கருவிகளாக நாட் பட்ட வலி ஏற்றுக்கொள்ளும் வினாத்தாள் ( Chronic pain acceptance questionnaire) மற்றும் நோயாளி அடையாளப்படிவ வினாக்கொத்து என்பன பயன்படுத்தப்பட்டன. இவ் ஆய்வின் துணை அளவுகோள்களில், வலியினை உணரும் போது கூட இயல்பான வாழ்க்கையை வாழ்வதற்கான பங்கேற்பாளர்களின் சராசரி, துணை மதிப்பெண் 4.0380 ஆகவும், வலியினை தவிர்ப்பது அல்லது கட்டுப்படுத்துவது என்பது பயனற்ற உத்தி என்று ஏற்றுக் கொள்வதுடன் தொடர்புடையதற்கான அளவுகோலுக்கான சராசரி துணை மதிப்பெண் 4.0380 ஆகவும் காணப்பட்டதுடன் வலியேற்பின் மொத்த அளவில் அவர்களின் சராசரி மதிப் பெண்ணானது, 4.2235 ஆக காணப்பட்டதுடன் இது இவ் நாட்பட்டவலி நோயாளிகளின் வலியேற்பு அளவானது மிதமான நிலையில் இருப்பதையும் கண்டறிந்தது, மேலும் வலி யேற்றுக் கொள்ளலுடன் தொடர்புடைய காரணிகளில் குடும்பப் பொறுப்புக்கள் ( P <0.01) திருமண நிலை(P <0.05) கல்வி நிலை(P <0.05) தொழில் நிலை(P <0.05) வலியினை அனுபவிக் கும் காலகட்டம் ( P<0.01) குடும்பத்தின் பொருளாதார நிலை (P<0.01) ஆன்மீக நம்பிக்கை (P <0.01) ஆகியவற்றின் அடிப்படையில் பங்கேற்பாளர்களின் மொத்த மதிப் பெண்கள் மற்றும் அவர்களின் துணை மதிப்பெண்களில் புள்ளிவிபர ரீதியான வேறுபாடுகள் மற்றும் தொடர்புகள் காணப்பட்டதுடன் குடும்ப ஆதரவு (P >0.01) அடிப்படையில் புள்ளி விவர ரீதியாக குறிப்பிடத்தக்க தொடர்புகள் எதுவும் கண்டறியப்படவில்லை. மேலும் நாட்பட்ட வலி நோயாளிகளின் வலியேற்பு அளவில் குடும்ப ஆதரவு எதிர்மறையான விளை வினைக் கொண்டிருந்தது. எனவே இவை தொடர்பில் நாட்பட்ட வலி நோயாளிகளின் குடும்பத் தினருக்கு விழிப்புணர்வினை அதிகரிக்க செயற்பாடுகளினை திட்டமிடுவதுடன் எதிர் காலத்தில் நாட்பட்ட வலி நோயாளிகளின் குடும்பத்தினரும் உளவளத்துணைக்கு உள் வாங்கப்பட வேண்டும். மேலும் இதே போன்ற ஆய்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட வேண்டும்.*

**திறவுச் சொற்கள் :** நாட்பட்ட வலி, வலியேற்றுக்கொள்ளுதல், நாட்பட்ட வலியேற்றுக் கொள்ளுதலுடன் தொடர்புடைய காரணிகள்.